திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, 'லேண்ட் அக்விசிஷன் ஆக்ட்' என்ற சென்ட்ரல் ஆக்ட் இருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ் மெண்ட் அக்விசிஷன் என்ற ஆக்ட் மாநில அளவில் இருந்து கொண்டிருக்கிறது. நாம் கொடுத்த நஷ்ட ஈடு தொகை போதவில்லை, சென்ட்ரல் ஆக்டின்படிதான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே, அதற்கேற்றபடி நமது சட்டத்தைத் திருத்தப் போகிறீர்களா ? அந்தச் சட்டத்தின்படி நஷ்ட ஈடு தரப் போகின்றீர்களா ? இந்த இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே இதைப்பற்றித் தெரிந்து கொள்ள நியாயம் இல்லை. சென்ட்ரல் ஆக்டில் ஒரு பார்முலா சொல்லியிருக்கிறார்கள். நாம் ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் செய்வதற்காக அனைவரும் சேர்ந்து ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஸ்லம்மில் குடியிருப்பவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களுடைய நிலை உயர வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து அவர்களுடைய நன்மைக்காகப் பாடு படுகிறோம். நஷ்ட ஈட்டுத் தொகை சிறிது கூடுதலாகலாம், குறையலாம். எவ்வளவு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதையும் மற்றவைகளையும் நாம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

* 19 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government has formulated a rural housing scheme for removal of slum areas in at least five villages in every Panchayat Union; and

(*b*) if so, the amount of loan that would be given for the construction of homes ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக் களுக்கு, தங்களுடைய எல்லைக்குட்பட்ட ஐந்து கிராமங் களிலாயினும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற சர்க்குலர் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மென்ட் மூலமாக வந்துள்ளது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி வந்திருந்தால் அதற்கு அதிக அளவில் பணம் ஒதுக்கி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களிலே இரண்டுவிதமான ஸ்கீம்கள் இருக்கின்றன. ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் என்றும், வில்லேஜ் பிராஜக்ட் ஸ்கீம் என்றும் இரண்டு வகையான ஸ்கீம்கள் இருக்கின்றன. ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டுக்காக இல்லை. ஏழைகளுக்கு வீடுகள்

1969 ஆகஸ்ட் 18]

கட்டிக் கொடுப்பதற்காக இதன்படி பத்தாயிரம் ரூபாய் வரையில் கொடுக்கலாம். வில்லேஜ் ப்ராஜக்ட் திட்டத்தின்கீழ் மூவாயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ் மெண்ட்டுக்காக என்று தனியாக ஸ்கீம் இல்லை.

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், இந்தக் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்களுக்குப் போட்டேன். அந்த அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஐயா அவர்கள், ஹவுசிங் போர்டுக்கு அமைச்சராக இருப்பதால்தானோ என்னவோ இவர் பதில் சொல்கிறார். அதனால்தான் சரியான பதில் வரவில்லை. எந்தக் கேள்வி எந்த அமைச்சருக்குப் போட வேண்டும், யாருக்குப் போடுவது பொருத்தம் என்பதற்காக உங்களுடைய விதி முறைகளைத் திருத்தியமைத்துக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரே விளக்கம். நீங்கள் கேள்வி கேட்டிருப்பதை, எந்த அமைச்சருக்குப் போட்டாலும் அந்தத் துறை சம்பந்தமான அமைச்சரிடமிருந்தே பதில் கிடைக்கும். நீங்கள் கேள்வியில் ரூரல் ஹவுசிங் ஸ்கீமைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அது ஸ்டேட் ஹவுசிங் போர்டு கீழ் வருகிறது. ஸ்டேட் ஹவுசிங் போர்ட்டின் கண்ட்ரோலில் அது இருக்கிறபடியால் இந்த அமைச்சர் பதில் கூறினார். மேலும் ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு இன்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் தனியாக இருக்கிறது. இன்ஜினியர் இருக்கிறார். எந்தெந்த இடத்தில், எந்தெந்த கிராமத்திற்குப் பணம் கொடுக்கலாம் என்பதைப் பார்வையிட்டு சிபாரிசு செய்வார். அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பதை ஏற்பாடு செய்து வருகிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியோடு ஸ்லம் பற்றியும் இணைத்திருக்கிறார்கள். ரூரல் ஹவுசிங்கோடு ஸ்லம் பற்றியும் இணைத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேள்வியைத் தெளிவாகப் போட்டிருந்தால், பதில் தெளிவாகக் கிடைத்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டருக்குப் போடவில்லை, லா மினிஸ்டருக்குத்தான் போட்டிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Law Minister was in charge of housing.

Sadayarkoil near Grand Anicut.

* 20 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether a very old neglected Chola temple named Sadayarkoil is situated a mile and a half away from Koviladi near Grand Anicut on the bund of the Coloroon bank;

(*b*) whether poojas are conducted regularly; and

(*c*) whether it is under the control of Hindu Religious Endowments Board ?